**பாடம் – 8**

# கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு
# NEW LIFE IN CHRIST

பாவத்திற்கு மரித்து (மனந்திரும்பி) திருமுழுக் கிலே இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, புது வாழ்விற்காக எழுந்திருந்து நடப்பவனே கிறிஸ்தவன் (ரோ. 6:4) அவன் ''மறுபடியும் பிறந்தவன்'' (யோ. 3:5) நாம் பாவத்திற்கு மரித்த படியினால், ''ஆண்டவராகிய இயேசுவுக்குள்ளாக'' நம்முடைய ''தேவனுக்கென்று ஜீவிக்க வேண்டும்'' (ரோ.6:11) இனி நமக்கு பாவம் ஒரு பிரச்சனையாக இருக்குமா?

''ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேது வான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிற வர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்'' (ரோ.6:12,13)

நாம் ''கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டோம்'' (கலா. 2:20) நாம் பாவம் நிறைந்த பழைய மனிதனை சாவுக்கு ஒப்புக் கொடுத்தோம். நம்முடைய புதுவாழ்க்கையானது, பழைய வாழ்க்கையைவிட வித்தியாசமாக இருக்க வேண்டும். நாம் மாற்ற வேண்டிய பல காரியங்கள் உள்ளன. நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். ஏனெனில் தேவன் பரிசுத்தராயிருக் கிறார் (1பேதுரு 4:7) நம்முடைய மனந்திரும்பு தலினாலே, திருமுழுக்கின்போது, தேவன் நம்முடைய பாவங்களை கழுவிச் சுத்தமாக்கினார் (அப். 22:16) திருச்சபை என்னும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நாம் சேர்க்கப்பட்டோம் (அப். 2:47) நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில், தேவன் நமக்கு நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பையும் (அப்.2:38), நித்திய வாழ்வையும் கொடுப்பதாகவும் (எபி.5:9) வாக்குக் கொடுத்துள்ளார். அவருடைய வாக்கில் நமக்கு நம்பிக்கை உண்டு. (கொலோ.2:12)

''இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாக்குதலைத் தேவபயத்தோடே பூரணப் படுத்தக் கடவோம்'' (2கொரி.7:1)

பவுல் கிறிஸ்தவ வாழ்வை, உடையை மாற்றும் ஒரு நபருடன் ஒப்பிடுகிறார். (கொலோ.3:1-17) வயல்நிலத்தில், நாள் முழுவதும் வேலை செய்த ஒரு தொழிலாளியை நினைத்துக் கொள்ளுங்கள். அவன் உடைகள் அனைத்தும் அழுக்காகவும், உடல் முழுவதும் வியர்வையாக வும் இருக்கும் (பாவம் நம்மை ஆவிக்குரிய வகையில் அழுக்காக்கி விடும்)

அவன் வீட்டிற்கு வந்து அழுக்கான உடையை கழற்றுகிறான். பின்பு அழுக்கான உடையை சலவைக்கட்டி (சோப்) உதவியுடன் கழுவி, பின்பு புது உடையை அணிகிறான். நாம் பாவங்களி லிருந்து மனந்திரும்பி, திருமுழுக்கு பெறும் பொழுது, நாம் பழைய உடையை களைந்து, கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுகிறோம்.

பின்பு, நாம் அழுக்காகவும் வியர்வையாகவும் உள்ள அதே பழைய உடையையே போட நினைப்போமா? ஒரு போதும் அப்படி செய்ய மாட்டோம். மாறாக, நாம் நீதியின் ஆடையாகிய புதிய தூய்மையானதை உடுத்த விரும்புவோம். தேவன் நம்மை படைத்தாரே, நாம் பரிசுத்தமாய் இருக்க விரும்புகிறோம். இல்லையா? (1பேதுரு. 2:9)

கீழ்வரும் வசனங்களில் பவுல் இதைக் கூறுகிறார்.

''நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண் டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள்.

ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந் திருக்கிறது.'' (கொலோ.3:3)

நம்முடைய சிந்தனைகள் கூட மாற வேண்டும். (2கொரி. 10:15) நாம் பூமிக்குரிய காரியங்களைவிட பரலோகத்திற்குரிய (ஆவிக் குரிய)வற்றைப் பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டும். நம்மை மறுபடியும் பாவத்திற்கு உட்படுத்தும் சிந்தனைகளை நாம் சாகடிக்க வேண்டும். ''விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொரு ளாசை'' (கொலோ. 3:5)

மேலும் பவுல் சொல்லும்போது, அழுக்கான உடையைப் போன்று களைந்துப் போட வேண்டியவற்றை குறிப்பிடுகிறார்.

''இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவை களையெல்லாம் விட்டு விடுங்கள்.

ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளை யும் களைந்து போட்டு,

தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப் பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டு இருக்கிறீர்களே'' (கொலோ.3:8-10)

வசனம் 5ல் சொல்லப்பட்டவை சரீர ஒழுக்க மின்மை சம்பந்தப்பட்டவை; வசனம் 8-10 வரை உள்ளவை, மனோபாவம் மற்றும் பேச்சு சம்பந்தப் பட்டவை. நாம் கிறிஸ்தவர்களாகையில் நம்முடைய வாழ்வில் சிலவற்றை மாற்றுகிறோம். நித்தியத்தின் வெளிச்சத்தில் வாழ்வு ஆராயப்படு கிறதே தவிர, நம்முடைய அனுதின வாழ்வை வைத்தல்ல. இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த காரியங்கள், இயேசு மற்றும் அவருடைய திருச்சபை சம்பந்தப்பட்டவை. இயேசு, அவரு டைய மக்களுக்காக (உயிருடன் / மரித்தவர்) திரும்ப வருகிறார். மற்றும் பரலோகிற்கு கொண்டு செல்வார் என்று நமக்குத் தெரியும். இயேசுவுடன் நம்முடைய வாழ்வு (கொலோ. 3:4) வெளிப்பட அவர் திரும்ப வருகிறார். (2தெச. 1:7-9) நம்மையே அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும்.

நம்முடைய மனோபாவம், நாம் ஏற்கனவே கொண்டிருந்த பாவ சிந்தனையைப்போல் அல்லாமல் வித்தியாசமாக இருக்க வேண்டும். எல்லோரும் பார்க்கும்படியாக நம்முடைய கோபத்தை வெளிக்காட்டுவதைவிட்டு, அதை நாம் அடக்கிக் கொள்ள வேண்டும். ஒரு கழுவப்பட்ட ஆத்துமாவில் கறையப்பட்ட வாய் காணப்படக் கூடாது. நம்முடைய நாவு - பிறரை ஏமாற்றவோ அசிங்கமானதை பேசவோ பயன்படக்கூடாது. உண்மையாகவே சத்தியத்திற்கு தங்களை அர்ப் பணித்தவர்களால் பொய் சொல்ல முடியாது.

ஆனால், பழைய எண்ணங்கள், மனோ பாவங்கள் மற்றும் செயல்களை களைந்து போடுவதை விட கிறிஸ்தவம் இன்னும் அதிக முக்கியம் வாய்ந்தது. தேவன் நம்மை உடுத்த விரும்பும் அந்த புதிய உடைகளை நாம் உடுத்த வேண்டும்.

''ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியரும், உருக்க மான இரக்கத்தையும், தயவையும், மனத் தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு ஒருவரை யொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

தேவசமாதானம் உங்கள் இருதயங் களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப் பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களா யிருங்கள்.'' (கொலோ. 3:12-15)

ஒருவர் தன்னைத்தான் மாற்றிக் கொள்வது என்பது எளிதல்ல. பெருமை மனத்தாழ்மையாய் மாற வேண்டும். கோபம் இரக்கம் மற்றும் நீடிய பொறுமையாய் ஒருவர் மற்றவருக்கு மன்னிக்கின்ற தன்மையாய் மாற வேண்டும். கிறிஸ்தவனாதல் என்றால் ஒரு புது மனிதனாக மாறுவதாகும். தேவனுடனான உறவில் மாத்திரம் அல்ல. மனிதர்களிடம் கூட, நாம் நம்மை நாமே கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் மாற்ற வேண்டும் (ரோ. 8:29). நாம் நீதியின் நிமித்தம் துன்பம் அனுபவித்தாலும், அவருடைய மாதிரியை பின்பற்ற வேண்டும். (1பேதுரு 2:21-24)

நம்முடைய புது வாழ்வானது, உலகில் உள்ள எல்லா உறவுகட்களுக்கும் ஒரே புத்துணர்வை கொடுக்கும். அப்படியானால், நாம் சிறந்த வேலைக் காரராய் (தொழிலாளி), எஜமான்களாய் இருப்போம் (கொலோ.3:22 ; 4:1) நாம் சிறந்த பிரஜையாய் நாட்டிற்கு இருப்போம். (1பேதுரு 2:13-17) பாருங்கள்! ஒரு புது மனிதனாக, சிறந்த உலக உறவோடு, ஒரு கிறிஸ்தவனாய் இருப்பது எவ்வளவு மகிமையானது! இவை எல்லாவற்றை யும் விட சிறந்தது. இருட்டில் நடந்து சாத்தானின் பிள்ளையாய் இருப்பதைவிட வெளிச்சத்தில் நடந்து தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதுதான்.

''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புது சிருஷ்டியா யிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின'' (2கொரி. 5:17)

**கடமைகள் அல்லது பொறுப்புகள்!**

நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்றவர்களானால் நிறைய ஆசீர்வாதங்களும் மற்றும் நிறைய கடமை அல்லது பொறுப்புகளும் உண்டு. முதலாவது கடமை, தேவனை உங்களுடைய வாழ்வில் முதன்மையாக வைப்பது (லூக். 14:26-33, மத். 22:37-29) இரண்டாவது ''அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்'' (பிலி. 2:12)

பிறகு நீங்கள் ''உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்புகூற வேண்டும்'' (மத்.22:39). இந்தக் கடமை உங்களுக்கு திருச்சபையில் உள்ளவர்களிடத் திலும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களிடத்திலும் இருக்க வேண்டும். எல்லா சகோதரர்களும் கிறிஸ்து நம்மை நேசித்தது போல ''ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்'' (யோ.13:34,35 ; 1யோ. 4:7,8) ஒருவருக்கொருவர் உதவுவதைப் பற்றி சொல்லக்கூடிய நிறைய பகுதிகள் உள்ளன. அதாவது போதித்து, புத்திசொல்லி, உற்சாகப் படுத்தி மற்றும் ஒருவருக்கொருவர் சேவை செய்து (எபே. 5:19 ; எபி. 3:13 ; கலா. 5:13) மற்றும் பல.


அப்படியானால், கிறிஸ்தவர்கள் அல்லாதவர் களைப் பற்றி என்ன? நாம் அவர்களை எப்படி நடத்த வேண்டும்?

''புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்.

அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும்,

உப்பால் சாரமேறினதாயு மிருப்பதாக.'' (கொலோ. 4:5,6)

அவர் எல்லா மனிதருக்கும் கடன்பட்டவர் என்று பவுல் சொல்லுகிறார். ஏனெனில் அவர் களுக்கு அவர் சுவிசேஷம் சொல்ல கடமைப் பட்டிருந்தாராம். (ரோ.1:14) நீங்களும் கிறிஸ்தவர் கள் இல்லாதவர்களிடம் நாம் பழகும்போது, நம்மில் அநேகருக்கு இருக்க வேண்டிய எண்ணம், நாம் இந்த உலகில் ஆண்டவரின் பிரதிநிதியாவோம். நம்முடைய வாழ்வு அவர்கள் ஆண்டவரின் உண்மையான உருவத்தைப் பார்க்கும் வண்ணமாக இருக்க வேண்டும்.



நீங்கள் இன்னும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படி யாமல் இருப்பீர்களானால், சற்று யோசித்துப் பாருங்கள்! உங்களுடைய பாவங்கள் உங்களுக்கு நித்திய அழிவையே பெற்றுக் கொடுத்துள்ளன. ஆனால், தேவன் உங்களுக்கு நித்திய வாழ்வு கொடுக்க விரும்புகிறார். (ரோ.6:23)

கிறிஸ்துவினுடைய சாயலில், யாரையாவது தொடர்பு கொள்ளுங்கள்; மேலும் உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கென்று அவரை உங்களுக்கு திருமுழுக்கு கொடுக்கச் சொல்லுங்கள் (அப். 2:38).

அப்படிச் செய்வீர்களானால், நீங்கள் பைபிளில் பார்க்கிற திருச்சபையில் ஒரு அங்கமாய் இருப்பீர்கள். அதாவது கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ, அந்த சபையில் நீங்கள் விசுவாசத்தில் வளர்ந்து, கிறிஸ்தவ நடைநடக்கும்போது தேவன் உங்களை அபரீதமாக ஆசீர்வதிப்பார்.

**கிறிஸ்தவனின் வாழ்க்கை முறை :**

''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறு படியும் சொல்லுகிறேன்.

உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லா வற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள்.

அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும்.

கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவை களெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவை களோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ள வைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.

நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.'' (பிலி. 4:4-9)